**உழவர்கரை நகராட்சி**
**புதுச்சேரி-5**

தேதி: 04/04/2022.

**செய்தி குறிப்பு**

உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பன்றிகள் வளர்ப்போர் கவனத்திற்கு. பன்றிகள் குடியிருப்பு பகுதிகளில் சுற்றித் திரிவதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு நோய் பரவும் அபாயம் இருப்பதாக சுகாதாரத்துறை மற்றும் பொதுமக்களிடம் இருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. பொதுவாக உழவர்கரை, காமராஜ் நகர், லாஸ்பேட்டை போன்ற பகுதிகளில் அதிக அளவில் பன்றிகள் சுற்றி திரிவதாக புகார்கள் வந்தவண்ணம் உள்ளது

இதனால் பன்றிகள் வளர்ப்போர் தங்கள் பன்றிகளை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இருந்து அப்புறப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தவறும்பட்சத்தில் நகராட்சியால் பன்றிகள் பிடிக்கப்பட்டு அப்புறபடுத்தப்படும் என்றும் அவ்வாறு பிடிக்கப்படும் பன்றிகள் அதன் உரிமையாளர்களிடம் திருப்பித் தர இயலாது என்றும் இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறது

**(ஆ.சுரேஷ்ராஜ்)**
**ஆணையர்**
**உழவர்கரை நகராட்சி**

---

மேற்படி செய்தியை தங்கள் பத்திரிக்கையில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஆணையர்**
**உழவர்கரை நகராட்சி**